வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 19.8.2024                நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பொதுத் துறை வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் , இன்று புதுடெல்லியில் நேபாள வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஆர்சு ராணா துயூபா-வை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஜம்மு-காஷ்மீரில், செப்டம்பர் 18-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல், நாளை தொடங்க உள்ளது.

சுயநலமின்றி மக்களுக்கு சேவை புரிந்து வரும் மருத்துவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, மாநில அரசுகளுக்கு இருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

*நிர்மலா*

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில் பொது துறை வங்கிகளின் செயல்பாடு தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். மத்திய நிதி சேவைகள் துறைச் செயலர் திரு விவேக் ஜோஷி மற்றும் மூத்த அதிகாரிகளும் பல்வேறு பொது துறை வங்கிகளின் தலைவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். வங்கிகளின் வைப்பு நிதி வளர்ச்சி, கடன்-டெபாசிட் விகிதம், சொத்துக்களின் தரம் உட்பட வங்கிகளின் நிதி ஆரோக்கியம் பற்றிய முக்கிய குறியீடுகளின் நடப்பு நிலை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. பிரதமரின் வீட்டு வசதி திட்டம், சூரிய வீடு திட்டம், விஸ்வகர்மா திட்டம் போன்ற பல்வேறு மத்திய திட்டங்களின் அமலாக்கத்தில் பொது துறை வங்கிகளின் பங்கு பணி குறித்தும் மதிப்பீடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தைத் தொடர்ந்து, மத்திய நிதியமைச்சர் இன்று மாலை, பிராந்திய ஊரக வங்கிகளின் செயல்பாடுகளையும் மறு ஆய்வு செய்கிறார்.

*ஜெய்சங்கர்*

5 நாள் அரசு முறைப் பயணமாக இந்தியா வந்துள்ள நேபாள வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஆர்சு ராணா துயூபா-வை, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுடெல்லியில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். வர்த்தகம், எரிசக்தி, உள்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகளில் பன்முக இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இந்த சந்திப்பின்

போது விவாதிக்கப்பட்டது. நேபாளம், சுமார் ஆயிரம் மெகாவாட் மின்சாரத்தை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யவிருப்பது குறித்து வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார். அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதான இந்தியாவின் கொள்கையும், இருநாட்டு மக்களுக்கு இடையிலான கலாச்சார தொடர்புகளும், இருதரப்பு ஒத்துழைப்பை ஊக்குவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவிற்கும்-நேபாளத்திற்கும் இடையே உயர்நிலையில் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் மரபிற்கு ஏற்றதாக நேபாள வெளியுறவு அமைச்சர் இந்திய பயணம் அமைந்திருப்பதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஜிம்பாப்வே*

ஜிம்பாப்வே நாட்டின் துணை அதிபர் திரு கான்ஸ்டான்டினோ குவேயா டொமினிக் சிவேங்கா இன்று புதுடெல்லி வந்துள்ளார். நாளை தலைநகரில், இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் 19-ஆவது இந்தியா-ஆப்பிரிக்கா வர்த்தக மாநாட்டில் அவர் கலந்து கொள்வார். இந்தியாவிற்கும் ஜிம்பாப்வே நாட்டிற்கும் இடையிலான வலுவான உறவுகளை பிரதிபலிக்கும் வகையில் இப்பயணம் அமைந்து இருப்பதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மலேசியா*

மலேசிய பிரதமர் டத்தோ சிரி அன்வர் பின் இம்ராஹிம் இன்று முதல் இந்தியாவில் 3 நாள் பயணம் மேற்கொள்கிறார். மலேசிய பிரதமர் என்கிற

முறையில் அவர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும். மலேசிய பிரதமர் நாளை புதுடெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்துகிறார். இப்பயணத்தின் போது குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆகியோரையும் திரு அன்வர் இம்ராஹிம் சந்திப்பார் என தெரிவித்துள்ளது. இந்தியாவிற்கும், மலேசியாவிற்கும் இடையே வரலாற்று ரீதியிலும் சமூக கலாச்சார ரீதியிலும், வலுவான பிணைப்புகள் இருப்பதும் 2015-ஆம் ஆண்டு பிரதமர் திரு நரேந்திர மோடி மலேசியா சென்ற போது, இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள், மேம்படுத்தப்பட்ட கூட்டாண்மை அந்தஸ்த்திற்கு உயர்த்தப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

*ரக்ஷா பந்தன்*

சகோதர-சகோதரி உறவை வலியுறுத்தும் ரக்ஷா பந்தன் திருநாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். இந்நாளை ஒட்டி, இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் இல்லத்திற்கு சிறுமிகள் நேரில் சென்று, பிரதமரின் கையில் ராக்கி கட்டி, தனது அன்பை வெளிப்படுத்தினர். இக்குழந்தைகளுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

*சமஸ்கிருதம்*

உலக சமஸ்கிருத நாளை ஒட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். சமஸ்கிருத மொழி மீது ஆர்வம் கொண்டு அதன் பயன்பாட்டை பரப்ப முயல்வோர் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துக் கொள்வதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார்.

*ஜம்மு-காஷ்மீர்*

ஜம்மு-காஷ்மீரில் செப்டம்பர் 18-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான, தேர்தல் அறிவிக்கை நாளை வெளியிடப்பட்டு, வேட்பு மனு தாக்கல் தொடங்க உள்ளது. அனந்தநாக், ஷோபியான், குல்காம், ராம்பன், கிஷ்த்வார் மற்றும் தோடா மாவட்டங்களுக்கு உட்பட்ட 24 சட்டமன்ற தொகுதிகளுக்கான இந்த முதல் கட்ட தேர்தலில் வேட்புமனுதாக்கல் செய்ய கடைசி நாள், வரும் 27-ஆம் தேதியாகும். மறுநாள் 28-ஆம் தேதி வேட்புமனு பரிசீலனை நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள கடைசி நாள், ஆகஸ்டு 30-ஆம் தேதியாக இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில், 3 கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் நாளை வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

குரங்கம்மை

குரங்கம்மை நோயை சமாளிப்பதற்கான நாட்டின் தயார் நிலை குறித்தும், பொது சுகாதார ரீதியில் இதற்கென மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பிரதமரின் முதன்மை செயலர் டாக்டர் பிகே மிஸ்ரா இன்று உயர்நிலை மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார். நிலவரங்களை, பிரதமர் திரு நரேந்திர மோடி, தொடர்ச்சியான முறையில் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்தார். குரங்கம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்களை உடனுக்குடன் கண்டுபிடிப்பதற்கான கண்காணிப்பு நடைமுறைகளை திறம்பட்ட முறையில் மேற்கொள்ளவும் பரிசோதனை வசதிகளை வலுப்படுத்தவும், இன்றைய கூட்டத்தில் திரு மிஸ்ரா, மாநிலங்களுக்கு அறிவுறுத்தினார். குரங்கம்மை நோய்க்கு எதிரான தடுப்பு முறைகள் மற்றும் சிகிச்சைகள் குறித்து தகவல்களை பெரிய அளவில் பரப்ப வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். நாட்டில் தற்போது 32 ஆய்வகங்களில் குரங்கம்மை நோய்க்கான பரிசோதனை வசதிகள் இருப்பதாகவும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முருகன்

சுயநலமின்றி மக்களுக்கு சேவை புரிந்து வரும் மருத்துவர்களை பாதுகாக்கும் பொறுப்பு, மாநில அரசுகளுக்கு இருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார். இன்று சென்னை ஆகாஷ்வாணி நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய

அவர் டாக்டர்களின் பாதுகாப்பு குறித்த மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை அமல்படுத்துவதில் மாநில அரசுகள் பொறுப்புடன் நடந்து கொள்ளுதல் அவசியம் என்றார். 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வல்லரசாக மேம்படும் என்றும், இதற்கான முயற்சிகளில் மத்திய அரசு முழு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். தமிழகத்தில் உள்ள திமுக அரசு, மத்திய திட்டங்களை தன் சொந்த திட்டம் போல் அமல்படுத்துவதாக திரு எல் முருகன் குற்றம் சாட்டினார். மத்திய அரசு தமிழகத்திற்கு 8 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி உள்ள நிலையிலும் போதிய நிதி விடுவிக்கப்படவில்லை என்பது போன்ற தோற்றத்தை திமுக உருவாக்குவதாக அவர் குறிப்பிட்டார். நேற்று நடைபெற்ற நினைவு நாணயம் வெளியீட்டு விழாவில் பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மத்திய அரசின் சார்பில் தான் கலந்து கொண்டதாகவும், இது அரசியல் நிகழ்ச்சி அல்ல என்றும் திரு எல் முருகன் கூறினார். பத்திரிக்கையாளர்களுக்கு காப்பீடும், பிரதமரின் சுரக்ஷா திட்டத்தின் கீழ் ஆயுள் காப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் வரும் பல்வேறு ஊடக பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்து, இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் இன்று சென்னையில் மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார். மத்திய அரசின் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்லும் பொறுப்பு அனைத்து ஊடக பிரிவுகளுக்கும் இருப்பதாக அவர் கூறினார்.

தமிழ்நாடு,புதுச்சேரி, கேரளா,கர்நாடகா, ஆந்திர பிரதேஷ் மற்றும் தெலங்கானா மாநிலங்களைச் சேர்ந்த மண்டல ஊடகப் பிரிவு தலைமை அதிகாரிகள் இந்த மறுஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

*டாக்டர்*

கொல்கத்தா ஆர்ஜி கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனிப்பட்ட முறையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென, பத்ம விருது பெற்ற 70 டாக்டர்கள் கூட்டாக பிரதமருக்கு கடிதம் எழுதி உள்ளனர். மருத்துவர்களால் மக்களுக்கு வழங்கப்படும் சேவையின் அஸ்திவாரத்தையே அசைக்கும் வகையிலான இத்தகைய சம்பவங்கள், மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க அவசர தேவை இருப்பதையே வெளிப்படுத்துவதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஜிப்மர்*

கொல்கத்தாவில் பெண் மருத்துவர் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து தொடர் போராட்டம் மேற்கொண்டுள்ள ஜிப்மர் மருத்துவர்கள் இன்று ஜிப்மர் ரத்த வங்கியில் ரத்த தானம் செய்யும் நூதன போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 200-க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் ரத்த தானம் செய்ததால் ஜிப்மர் ரத்த வங்கிக்கு

ஏராளமான ரத்தம் கிடைத்தது. உரிய நீதி மற்றும் பாதுகாப்பு கிடைக்கும் வரை போராட்டங்கள் தொடரும் என்றும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

*மூப்பனார்*

புதுச்சேரியில் மக்கள் தலைவர் ஜிகே மூப்பனார் பிறந்த நாள் விழா அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. மரப்பாலம் சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் திரு நமச்சிவாயம், திரு திருமுருகன், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு ராஜவேலு, அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி, திரு சம்பத், திரு அசோக் பாபு ஆகியோர், மலர் தூவி மரியாதை செலுத்தினர். சதுக்கத்தின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மூப்பனாரின் திருவுருவப் படத்திற்கும், மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

*தலைமை செயலர்*

தமிழக அரசின் புதிய தலைமை செயலராக திரு முருகானந்தம் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இதுவரை இப்பதவியில் இருந்த திரு சிவதாஸ் மீனா கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக இருந்த திரு லட்சுமிபதி, முதலமைச்சரின் இணை செயலராக மாற்றப்பட்டு, தூத்துக்குடி மாவட்டத்தின் புதிய ஆட்சியராக திரு இளம் பகவத் நியமிக்கப்பட்டுள்ளார்.

*ராணுவ தளபதி*

முன்னாள் ராணுவ தளபதி ஜென்ரல் சுந்தர்ராஜன் பத்மநாபன். சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று காலமானார். அவருக்கு வயது 83. டேராடூனில் உள்ள இந்திய ராணுவக் கல்லூரியில் பயின்றவரான சுந்தர்ராஜன் பத்மநாபன், தமது நீண்டகால ராணுவ சேவையில் பல்வெறு போர்களில் பங்கேற்றதுடன், 2 நூல்களையும் எழுதி உள்ளார்.

*வானிலை*

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக இன்று தமிழகத்தின் அநேக இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யய் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தேனி, திண்டுக்கல், மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழைக்கும், கோவை மாவட்ட மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 25-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. மன்னார் வளைகுடா உள்ளிட்ட தமிழகத்தின் கடலோரப் பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்க கடல் உள்ளிட்ட வங்க கடல் பகுதிகளில் மணிக்கு 45 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

இதற்கிடையே இன்று கன்னியாகுமரியில் கடல் உள்வாங்கியதால், விவேகானந்தர் நினைவு பாறைக்கான படகு போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. நாகை-இலங்கை இடையே, இன்றைய தினத்திற்கான கப்பல் சேவையும், வானிலை மாற்றம் காரணமாக ரத்து செய்யப்பட்டு, இன்றைய பயணத்திற்கு முன்பதிவு செய்தவர்கள் நாளை பயணிக்க அறிவுறுத்தப்பட்டது.

ஸ்டாலின்

தமிழகத்திற்கான ரயில்வே திட்டங்களுக்கு போதிய நிதி ஒதுக்கப்படுவதை உறுதி செய்யக் கோரி, தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின், ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவிற்கு கடிதம் எழுதி உள்ளார். தெற்கு ரயில்வேயின் புதிய ரயில் பாதை திட்டங்கள், இரட்டைப் பாதை திட்டங்கள், மற்றும், பயணிகளின் வசதிகளுக்கான திட்டங்களுக்கு, நடப்பு நிதியாண்டிற்கான மத்திய அரசின் இடைக்கால பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு, வழக்கமான ரயில்வே பட்ஜெட்டில் கணிசமாக குறைக்கப்பட்டுள்ளதால் தமிழகத்தில் ரயில்வே திட்டங்களின் அமலாக்கத்தில் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக கடிதத்தில் முதலமைச்சர் கூறி உள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பொதுத் துறை வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று புதுடெல்லியில் மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்

வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் , இன்று புதுடெல்லியில் நேபாள வெளியுறவு அமைச்சர் டாக்டர் **ஆர்சு ராணா துயூபா**-வை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

ஜம்மு-காஷ்மீரில், செப்டம்பர் 18-ஆம் தேதி நடைபெற உள்ள **முதல் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான** வேட்பு மனு தாக்கல், நாளை தொடங்க உள்ளது.

சுயநலமின்றி மக்களுக்கு சேவை புரிந்து வரும் மருத்துவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, மாநில அரசுகளுக்கு இருப்பதாக, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------